**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 145 / 2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW18 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Tmt. Muthulakshmi |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 28th day of October, 2025.

**(A1 to A6 are present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை** :

நான் தற்போது சென்னை தடய அறிவியல் துறையில் உயிரியியல் பிரிவில் இளநிலை அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 11/08/2022 அன்று பணியில் இருந்தபோது SRMC காவல் நிலைய குற்ற எண் 453/2022 வழக்கு பொருட்களை மு.நி.கா. 30951 திருமதி. அங்காளேஸ்வரி என்பவர் மூலம் மூடி

முத்திரையிடப்பட்ட காகிதஉறை ஒன்று பெறப்பட்டது. அக்காகித உறையின் மேல் கமலா 40/F, AR No. 803658 குற்ற எண் 453/2022 SRMC PS என குறிப்பிடப்பட்டு அதனுள் கீழ்கண்ட வழக்கு சொத்துக்கள் காணப்பட்டன. வரிசை 1) பாலிதின் கவரில் சில முடி துண்டுகள் வரிசை 2) வெண் தடவுலுடன் கூடிய கண்ணாடி வில்லை -1, வரிசை 3) HBS என குறிப்பிடப்பட்ட பிளாஸ்ட்டிக் குழாயினுள் பஞ்சு துடைப்பான் -1, 4) Cervical Swab என குறிப்பிடப்பட்ட பிளாஸ்ட்டிக் குழாயினுள் பஞ்சு துடைப்பான் -1. இவ்வழக்கு பொருட்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு கீழ்கண்டவாறு சான்று வழங்கியுள்ளேன். வழக்கு சொத்து பொருள் 1, 3 மற்றும் 4ல் விந்தானது காணப்படவில்லை என சான்று வழங்கியுள்ளோம். வழக்கு பொருள் 2ல் விந்தணுக்கள் எதுவும் காணப்படவில்லை என்று சான்று வழங்கியுள்ளோம். இதற்கான அறிக்கை T.No. 6883/2022, Biol 625/2022 dated 12/09/2022 அன்று வழக்கியுள்ளேன். பகுப்பாய்வு அறிக்கையை காவலர் திரு. சுதாகர் அவர்கள் மூலம் 06/10/2022 அன்று SRMC காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி அறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

இல்லை.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.